# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2470- 2026 ජනවාරි මස 02 වැනි සිකුරාදා - 2026.01.02

2470 ஆம் இலக்கம் - 2026 ஆம் ஆண்டு சனவரி மாதம் 02 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி III - காணிகள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | |
|---|---|
| காணி நிர்ணய அறிவித்தல்கள் | - |
| முன்னறிவித்தல்கள் | - |
| இறுதிக் கட்டளைகள் | - |
| காணி மறுசீமைப்பு ஆணைக்குழுவின் அறிவித்தல்கள் | - |
| அரசாங்க அதிபர்களினால் காணி விற்பனைகள் | - |
| மேல் மாகாணம் | - |
| மத்திய மாகாணம் | - |
| தென் மாகாணம் | - |
| வட மாகாணம் | - |
| கிழக்கு மாகாணம் | - |
| வடமேல் மாகாணம் | - |
| வடமத்திய மாகாணம் | - |
| ஊவா மாகாணம் | - |
| சப்பிரகமுவ மாகாணம் | - |
| சிறுநிலச் சொந்தக்காரர் திட்டத்தின் கீழ் அறிவித்தல்கள் | - |
| நிர்ணய உத்தயோகத்தர்களினாற் காணி விற்பனைகள் | - |
| மேல் மாகாணம் | - |
| மத்திய மாகாணம் | - |
| தென் மாகாணம் | - |
| வட மாகாணம் | - |
| கிழக்கு மாகாணம் | - |
| வடமேல் மாகாணம் | - |
| வடமத்திய மாகாணம் | - |
| ஊவா மாகாணம் | - |
| சப்பிரகமுவ மாகாணம் | - |
| காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள் | - |
| காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் கீழ் அறிவித்தல்கள் | 2 |
| காணி மீட்டல் பற்றிய அறிவித்தல்கள் | - |
| நானாவித காணி அறிவித்தல்கள் | 3 |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**
**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும். இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது 2026, சனவரி மாதம் 23 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2026, சனவரி மாதம் 09 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."

**எஸ்.டீ. பாண்டிகோராள,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2026 ஆம் ஆண்டு சனவரி மாதம் 02 ஆந் திகதி.

*இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*


1 - B 82751 - 403 (2026/01)

# காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் கீழ் அறிவித்தல்கள்

காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்

இணைப்பு 09

**காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 ஆவது பிரிவின் (4) ஆவது உட் பிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள வழங்கல் பத்திரத்தை இரத்துச் செய்தல் (104 ஆவது பிரிவு) தொடர்பான அறிவித்தல்.**

தென் மாகாணத்தின் மாத்தறை மாவட்டத்தின், வெலிகம பிரதேச செயலாளர் பிரிவின் பிரதேச செயலாளர் / உதவிக்காணி ஆணையாளர் (மாகாணங்களுக்கு இடையிலான) தல்பெ லியனகே நிரோசா சமந்தி மெண்டிஸ் ஆகிய நான், காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19(4) ஆம் துணை உறுப்பிரையின் கீழ் அதி மேதகு சனாதிபதியினால் 1982, மே மாதம் 27 ஆந் திகதி வழங்கப்பட்டுள்ள மாத்தறை / பிர /3770ஆம் இலக்க வழங்கல் பத்திரத்தின் உரிமையாளரான பாத்தெகமையை வசிப்பிடமாகக் கொண்ட ஜயவர்தன கங்கானம்கே ஹின்னிஹாமினா அவர்களுக்கு வழங்கப்பட்டு மாத்தறை மாவட்டப் பதிவாளர் அலுவலகத்தில் LDO 2794 ஆம் இலக்கத்தின்கீழ் 1982, செத்தெம்பர் மாதம் 13 ஆந் திகதி பதிவு செய்யப்பட்டுள்ள கீழ்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ள காணிக்கு பின் தொடரும் ஒருவர் ஆகுவதற்காக சட்டரீதியாக உரிமையாளர் ஒருவர் இல்லாமல் போவதால் அல்லது உரிமை உள்ள ஒருவர் இருந்த போதிலும் அவர் பின்தொடரும் ஒருவராவதற்கு விருப்பம் இல்லாமல் போகும் போது பின்தொடர்வதற்கு ஒருவர் இல்லையென்பது அறிய வந்துள்ளதால் குறிப்பிடப்பட்ட வழங்கல் பத்திரத்தை குறித்த சட்டத்தின் 104 ஆம் உறுப்புரையின் கீழ் இரத்துச் செய்வதற்கு நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டிருக்கின்றேன் என்பதை இதன் மூலம் அறிவித்துக் கொள்கின்றேன். இது தொடர்பாக ஏதேனும் எதிர்ப்புக்கள் இருப்பின் அதனை 2026.01.16 ஆந் திகதிக்கு முன்னர் எனக்கு எழுத்து மூலம் அறியத்தருதல் வேண்டும்.

**அட்டவணை**

மாத்தறை நிர்வாக மாவட்டத்தின் வெலிகம பிரதேச செயலாளர் பிரிவின் வெலிகம தொகுதியின் பாத்தெகம கிராம அலுவலர் பிரிவின் பாத்தெகம என்னும் கிராமத்தில் அமைந்துள்ளதுமான நில அளவையாளர் அதிகாரியின் பொறுப்பில் உள்ள அவரினால் தொகுக்கப்பட்ட ........... ஆம் இலக்க களப்பத்திரத்தில் /.................. இனால் தயாரிக்கப்பட்ட பீ.பீ.ஏ. 2091 ஆம் இலக்க துண்டு பிரிக்கும் நில அளவைப் படத்தில் உள்ள / .......... இனால் தயாரிக்கப்பட்ட................ ஆம் இலக்க வரைவுக் குறிப்பில் 37 ஆம் இலக்க காணித்துண்டாகக் காட்டப்பட்டுள்ளதுமான ஹெக்டயார்/ 00ஏ.00றூ. 22.6பே.) அளவு பிரமாண்டமுடையதுமான கீழ் காட்டப்பட்டுள்ளதுமான அரசாங்க காணித்துண்டு - குருந்து வத்த.

வடக்கு :பீ.பீ.ஏ. 2091 இல் 24 மற்றும் 36 ஆம் இலக்க துண்டுகள்;
கிழக்கு : பீ.பீ.ஏ. 2091 இல் 36,41 மற்றும் 40 ஆம் இலக்க துண்டுகள்;
தெற்கு : பீ.பீ.ஏ. 2091 இல் 40,39 மற்றும் 38 ஆம் இலக்க துண்டுகள்;
மேற்கு : பீ.பீ.ஏ. 2091 இல் 38 மற்றும் 24 ஆம் இலக்க துண்டுகள்.

ரீ.எல்.என்.எஸ். மெண்டிஸ்,
பிரதேச செயலாளர்.

வெலிகம,
2025.10.13.

01-46

---

இலங்கை மகாவலி அதிகார சபை

இணைப்பு 09

**காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 ஆவது பிரிவின் (4) ஆவது உட் பிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள கொடைப் பத்திரத்தை இரத்துச் செய்தல் (104 ஆவது பிரிவு) தொடர்பான அறிவித்தல்.**

இலங்கை மகாவலி அதிகாரியின் பொலன்னறுவை மாவட்டத்தில் தெஹியத்தகண்டி பிரதேச செயலாளர் பிரிவின் 'சீ' வலயத்தில் வதிவிட திட்ட முகாமையாளர் இமிஹாமி முதியன்சேலாகே உபய கல்யான குமார ஆகிய நான், காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19(4) ஆம் உப பிரிவின்கீழ் மதிப்பிற்குரிய அதிமேன்மை தங்கிய சனாதிபதியவர்களால் 2005.10.30 ஆந் திகதி கையளிக்கப்பட்டுள்ள இலக்கம் அம்/ சீ/மகா/ பிரா/ 12990 (மேட்டு) நில காணி) ஐ உடைய கொடைப்பத்திரத்தின் உரிமையாளரான தெஹியத்தகண்டிய, மாவணாகம, புஸ்ஸலவின்ன, இலக்கம் 139, இல் வதியும் ஹேனக ராலலாகே

நிமல் குணரத்ன பொலன்னறுவை மாவட்டப் பதிவாளர் அலுவலகத்தில் இலக்கம் ஈ 68/27 இன் கீழ் 2007.03.02 ஆந் திகதி பதிவு செய்யப்பட்டுள்ள கீழேயுள்ள உப ஆவணத்தில் காட்டப்பட்டுள்ள காணிக்கு பின்னுரிமையாளராவதற்காக சட்டப்படி உரிமையாளர் இல்லாத படியால் மற்றும் அவர் விரும்பாததால் பின்னுரிமைத் தன்மைக்கு எவருமில்லையெனப் பதிவாகியிருப்பதால் அவ் வழங்கல் பத்திரத்தைக் குறித்த சட்டத்தின் 104 ஆவது பிரிவின் கீழ் இரத்துச் செய்யவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாக இத்தால் அறியத்தருகின்றேன். இது தொடர்பில் ஏதேனும் எதிப்புக்கள் காணப்பட்டால் அது 2026.01.23 ஆந் திகதிக்கு முன் எழுத்து மூலம் எனக்கு அறிவிக்க வேண்டும்.

**அட்டவணை**

அம்பாறை நிர்வாக மாவட்டத்தில் தெஹயத்தகண்டிய செயலாளர் பிரிவின் பிம்தென்ன பற்றுவையின் / கோரளையின் கதிரபுற கிராம அலுவலர் பிரிவின் புஸ்ஸலவிண்ண எனும் கிராமத்தில் அமைந்துள்ளதும் நில அளவையாளர் இடம் உள்ளதும், நில அளவையாளர் நாயகத்தின் மூலம் திரட்டப்பட்ட இலக்கம் ............... உடைய காணித் துண்டுகளைப் பிரிக்கும் வரைபடத்தின்.................. இனால் தயாரிக்கப்பட்ட இலக்கம் மு/பி/ அம்/ 1719 ஐ உடைய ரேகை தடயத்தின் இலக்கம் 35 உடைய காணித் துண்டாகக் காணப்பட்டுள்ளதும் விஸ்தீரணத்தில் ஹெக்டயார்/ ஏக்கர் 0.2098 றூட்.பேர்ச்.... உள்ளதும் கீழே காட்டப்பட்டுள்ளவாறு எல்லைத் துண்டாவதுமான அரசாங்க காணி.

வடக்கு :இலக்கம் 24 உடைய காணித்துண்டு;
கிழக்கு : இலக்கம் 24 மற்றும் இலக்கம் 34 ஐ உடைய காணித்துண்டுகள்;
தெற்கு : இலக்கம் 34 மற்றும் இலக்கம் 52ஐ உடைய காணித்துண்டுகள்;
மேற்கு : இலக்கம் 52 மற்றும் இலக்கம் 24 ஐ உடைய காணித்துண்டுகள்.

I.M. உபய கல்யான குமார ,
வதிவிட திட்ட முகாமையாளர்.

திட்டம் சி, தெஹியத்தகண்டிய,
2025, ஓகத்து 19.

01-55

---

# நானாவித காணி அறிவித்தல்கள்

## காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்

காணி ஆணையாளர் நாயகத்தின் இலக்கம்: 4/10/70272
மாகாணக் காணி ஆணையாளரின் இலக்கம்: NCP/ PLC/ L3/ Talawa/Deerga

**21(2) ஆம் இலக்க அரசாங்க காணிகள் ஒழுங்குவிதிகளின் கீழான அறிவித்தல்**

வட மத்திய மாகாணத்தின் அநுராதபுரம் மாவட்டத்தின் தலாவ பிரசே செயலாளர் பிரிவின் இலக்கம் 405, மொரகொட கிராம அலுவலர் பிரிவில் மொரகொட கிராமத்தில் நில அளவை அலுவலரால் தயாரிக்கப்பட்ட 110162 ஆம் இலக்க கடத்திரள் வரைபடத்தில் பத்திர 01 இன் வலய இலக்கம் 03 இல் 02 ஆம் வலயத்தில் துண்டு இலக்கம் 139 மூலம் காண்பிக்கப்பட்டுள்ள 01 ஏக்கர், 01 றூட், 21.56 பேர்ச் பரப்பளவு கொண்ட அரசாங்கக் காணியை வர்த்தக நடவடிக்கைகளுக்காக சுவிமி அசோசியேட்ஸ் (தனியார்) கம்பனி பெயரில் நீண்ட காலக் குத்தகைக்கு கோரப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

02. கோரியுள்ள காணியின் எல்லைகள் கீழே குறிப்பிடப் பட்டுள்ளது.

வடக்கு:111 ஆம் இலக்கக் காணித்துண்டு;
கிழக்கு:140 ஆம் இலக்கக் காணித்துண்டு;
தெற்கு: 209 ஆம் இலக்கக் காணித்துண்டு;
மேற்கு: 138 ஆம் இலக்கக் காணித்துண்டு.

03.கோரப்பட்டுள்ள காணியை தேவைப்படுகின்ற காரணத்திற்காக குத்தகைக்கு வழங்குவதற்கு முடியும். எனவே அரசாங்கத்தின் அங்கீகரிக்கப்பட்ட ஏனைய நிபந்தனைகளின் கீழ் குத்தகைக்கு வழங்குவதற்கு அரசாங்கத்தினால் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

(அ) குத்தகைக் காலம் : முப்பது (30) வருடங்கள் (2025.11.18ஆந் திகதி முதல் 2055.11.17 ஆந் திகதி வரை);

(ஆ) வருடாந்தக் குத்தகைத் தொகை:2025 ஆம் ஆண்டின் காணியின் மதிப்பீட்டுப் பெறுமதியானது ஐந்து மில்லியன் ரூபாவிலும் (ரூ.5,000,000) குறைவாக இருக்கும் சந்தர்ப்பங்களில் தலைமை மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டின் அடிப்படையில் அந்த ஆண்டில் காணியின் மேம்படுத்தப்படாத பெறுமதியின் 2 % ஆகும். 2025 ஆம் ஆண்டின் காணியின் மதிப்பீட்டுப் பெறுமதியானது ஐந்து மில்லியன் ரூபாவிலும் (ரூ. 5,000,000) அதிக மாக இருக்கும் சந்தர்ப்பங்களில் தலைமை மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டின் அடிப்படையில் 2025 ஆம் ஆண்டில் காணிக்கான சந்தைப் பெறுமதியின் 4 % ஆகும். இந்த குத்தகைத்

தொகை சகல 05 வருடங்களுக்கொருமுறை திருத்தப்பட வேண்டுமென்பதோடு அது முன்னைய 05 வருடங்களின் இறுதியில் அறவிடப்பட்ட வருடாந்த குத்தகை தொகைக்கு 20 % சேர்க்கப்படல் வேண்டும்.

(இ) குத்தகைக்குப் பெற்றுக்கொள்பவர்கள் குத்தகை ஆரம்பித்து (01) வருட காலத்திற்குள் பிரதேச செயலாளர் திருப்தியடையும் வகையில் இந்தக் காணியை அபிவிருத்தி செய்தல் வேண்டும்;

(ஈ) இந்தக் காணியை வர்த்தக நடவடிக்கைகள் தவிர வேறு நடவடிக்கைகளுக்கு பயன்படுத்திக் கொள்ளக் கூடாது;

(உ) பிரதேச செயலாளர் மற்றும் ஏனைய நிறுவனங்களினால் விதிக்கப்பட்டுள்ள ஏனைய விசேட நிபந்தனைகளுக்கும் இந்தக் குத்தகை உட்படுதல் வேண்டும்;

(ஊ) அமைக்கப்பட்டுள்ள/நிர்மாணிக்கப்பட்டுள்ள கட்டிடங்களை சிறப்பான அபிவிருத்தி நிலைமயுடன் பேணிவரல் வேண்டும்;

(எ) காணியை குத்தகைக்கு விடப்பட்டிருக்கையில் குத்தகைக்காரர் காணியைப் பெற்றுக்கொண்ட விடயத்தை உரிய காலப்பகுதியினுள் நிறைவேற்றிக்கொள்வதற்கு தவறும் பட்சத்தில் குத்தகையை முடிவுறுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்;

(ஏ) 2025.11.18 ஆந் திகதியிலிருந்து ஐந்து (05) வருடங்கள் கழியும் வரை உரிமை மாற்றம் அல்லது இந்தக் காணியை குத்தகைக்குப் பெற்றுக்கொண்ட நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்வதற்கான உப குத்தகை அல்லது உரிமை மாற்றங்கள் தவிர ஏனைய உப குத்தகை அல்லது உரிமை மாற்றம் என்பவற்றுக்கு அனுமதி வழங்கப்பட மாட்டாது;

(ஐ) குத்தகைக்கான வாடகையை தொடர்ச்சியாக செலுத்த வேண்டுமென்பதோடு குத்தகையைச் செலுத்து வதற்குத் தவறும் பட்சத்தில் ஒப்பந்தம் தானாகவே இரத்தாகி விடும். குத்தகையைச் செலுத்துவதனை தொடர்ச்சியாக மேற்கொண்டிராத சந்தர்ப்பத்தில் செலுத்த வேண்டிய நிலுவை குத்தகைத் தொகைக்கு 10 % தண்ட வரி அறிவிடப்படும்.

வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்ட திகதி முதல் 06 வார காலத்திற்குள் குறித்த காணியைக் குத்தகைக்கு வழங்கக் கூடாதென ஏற்றுக்கொள்ளக்கூடிய காரணங்களை எழுத்து மூலமாக எனக்கு அறிவிக்காவிட்டால் கோரிக்கைக்கிணங்க குத்தகைக்கு வழங்கப்படும்.

துசித்த கலப்பத்தி,
உதவிக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகம் சார்பாக.

காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்,
இலக்கம் 1200/6, காணிச் செயலகம்,
''மிஹிகத்த மெதுர'',
ரஜமல்வத்த வீதி,
பத்தரமுல்லை,
2025, திசெம்பர் 17.

01- 23

## காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்

காணி ஆணையாளர் நாயகத்தின் இலக்கம்: 4/10/30530
மாகாணக் காணி ஆணையாளரின் இலக்கம்: ඉ/7/දීබ/ හිගු/2009 21(2)

21(2) ஆம் இலக்க அரசாங்க காணிகள் ஒழுங்குவிதிகளின் கீழான அறிவித்தல்

பொலன்னறுவை மாவட்டத்தின் ஹிங்குரக்கொடை பிரசே செயலாளர் பிரிவின் இலக்கம் 76R B01, கிராம அலுவலர் பிரிவின் FCP Po.07 நில அளவை வரைபடத்தின் துண்டு இல.759 இனால் காண்பிக்கப்பட்டுள்ள 0.0650 ஹெக்டயார் பரப்பளவு கொண்ட காணித்துண்டை வதிவிட நோக்கத்திற்காக திருமதி பயாகல வடுகே துயில்டா ஐராங்கனீ என்பவர் குத்தகைக்கு கோரியுள்ளதாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

02. கோரியுள்ள காணியின் எல்லைகள் கீழே குறிப்பிடப் பட்டுள்ளது.

வடக்கு:757 மற்றும் 711 ஆம் இலக்க காணித்துண்டுகள்;
கிழக்கு:711, 760 மற்றும் 495 ஆம் இலக்க காணித்துண்டுகள்;
தெற்கு: 495 ஆம் இலக்கக் காணித்துண்டு;
மேற்கு: 758 மற்றும் 757 ஆம் இலக்க காணித்துண்டுகள்.

03.கோரப்பட்டுள்ள காணியை தேவைப்படுகின்ற காரணத்திற்காக குத்தகைக்கு வழங்குவதற்கு முடியும். எனவே அரசாங்கத்தின் அங்கீகரிக்கப்பட்ட ஏனைய நிபந்தனைகளின் கீழ் மற்றும் கீழ்க் குறிப்பிடப்படும் நிபந்தனைகளின் கீழ் காணியை குத்தகைக்கு வழங்குவதற்கு அரசாங்கம் கருதியுள்ளது.

(அ) குத்தகைக் காலம் : முப்பது (30) வருடங்கள் (1995.06.15ஆந் திகதி முதல் முன்னோக்கி);

(ஆ) வருடாந்தக் குத்தகைத் தொகை தலைமை மதுப்பீட் டாளரின் மதிப்பீட்டின் அடிப்படையில் 1995ஆம் ஆண்டில் காணியின் மேம்படுத்தப்படாத பெறுமதியின் 4 % ஆகும்;

தண்டப்பணம்: காணியின் மேம்படுத்தப்பட்ட பெறுமதியின் 4% இனைப் போன்று மும்மடங்கு;

(இ) இந்தக் காணியை வசிப்பதற்கான வீடொன்றை நிர்மாணித்துக் கொள்ளல் தவிர வேறு நடவடிக்கைகளுக்கு பயன்படுத்திக் கொள்ளக் கூடாது;

(ஈ) அமைக்கப்பட்டுள்ள கட்டிடங்களை சிறப்பான அபிவிருத்தி நிலைமையுடன் பேணிவரல் வேண்டும்;

(உ) பிரதேச செயலாளர் மற்றும் ஏனைய நிறுவனங்களினால் விதிக்கப்பட்டுள்ள ஏனைய விசேட நிபந்தனைகளுக்கும் இந்தக் குத்தகை உட்படுதல் வேண்டும்;

(ஊ) காணியை குத்தகைக்கு விடப்பட்டிருக்கையில் குத்தகைக்காரர் காணியைப் பெற்றுக்கொண்ட விடயத்தை உரிய காலப்பகுதியினுள் நிறைவேற்றிக்கொள்வதற்கு தவறும் பட்சத்தில் குத்தகையை முடிவுறுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்;

(எ) 1995.06.15 ஆந் திகதியிலிருந்து ஐந்து (05) வருடங்கள் கழியும் வரை குடும்பத்திற்குள் உரிமை மாற்றம் அல்லது இந்தக் காணியை குத்தகைக்குப் பெற்றுக்கொண்ட விடயத்தை நிறைவேற்றிக் கொள்வதற்கான உப குத்தகை அல்லது உரிமை மாற்றங்களுக்கு அனுமதி வழங்கப்பட மாட்டாது. காணியில் வீடொன்றை நிர்மாணித்து மேம்படுத்தி நிரந்தரமாக வசித்ததன் பின்னர் மற்றும் காணியின் மேம்படுத்தப்படாத பெறுமதி மற்றும் தவணைத் தொகை/ தண்டப்பணத்தை ஒரே தடவையில் செலுத்தியதன் பின்னர் இந்தக் காணிக்கான அளிப்புப் பத்திரமொன்றைப் பெற்றுக் கொள்வதற்கான உரிமை கிடைக்கின்றது.;

(ஏ) குத்தகைக்கான வாடகையை தொடர்ச்சியாக செலுத்த வேண்டுமென்பதோடு குத்தகையைச் செலுத்து வதற்குத் தவறும் பட்சத்தில் ஒப்பந்தம் தானாகவே இரத்தாகி விடும். குத்தகையைச் செலுத்துவதனை தொடர்ச்சியாக மேற்கொண்டிராத சந்தர்ப்பத்தில் செலுத்த வேண்டிய நிலுவை குத்தகைத் தொகைக்கு 10 % தண்ட வரி அறிவிடப்படும்.

(ஐ) வீட்டின் நிர்மாணப் பணிகளுக்காக காணியை பாராதீனப்படுத்தும்போது குறித்துரைக்கப்பட்டு விதிக்கப்பட்ட காலப்பகுதியினுள் வீட்டின் நிர்மாணப் பணிகளை பூரணப்படுத்த வேண்டுமென்பதோடு அவ்வாறு மேற்கொள்ளத் தவறினால் நீண்ட கால குத்தகை உரிமைப்பத்திரம் இரத்தாகியதாக கருதப்படுவதுடன் காணியை மீண்டும் அரசாங்கத்திடம் ஒப்படைக்க வேண்டியேற்படும்.

இந்த அறிவித்தல் வெளியிடப்பட்ட திகதி முதல் 06 வார காலத்திற்குள் குறித்த காணியைக் குத்தகைக்கு வழங்கக் கூடாதென ஏற்றுக்கொள்ளக்கூடிய காரணங்களை எழுத்து மூலமாக எனக்கு அறிவிக்காவிட்டால் கோரிக்கைக்கிணங்க குத்தகைக்கு வழங்கப்படும்.

ஆர்.டீ.எல். சமிந்து லக்ஷான் ஜயரத்ன,
உதவிக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகம் சார்பாக.

காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்,
இலக்கம் 1200/6,
''மிஹிகத்த மெதுர'',
ரஜமல்வத்த வீதி,
பத்தரமுல்லை,
2025, திசெம்பர் 22.

01- 42

## காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்

காணி ஆணையாளர் நாயகத்தின் இலக்கம்: 4/10/69064
மாகாணக் காணி ஆணையாளரின் இலக்கம்: NP/28/ 04/ 02
44SLO/ 41/1748

21(2) ஆம் இலக்க அரசாங்க காணிகள் ஒழுங்குவிதிகளின் கீழான அறிவித்தல்

யாழ்ப்பாண மாவட்டத்தின் வேலணை ( தீவு தெற்கு) பிரதேச செயலகப் பிரிவின் வேலணை தென் மேற்கு (J/13) கிராம அலுவலர் பிரிவின் வேலணை கிராமத்தில் குடியிருப்பு அலுவலரால் தயாரிக்கப்பட்ட தோராயான இலக்க சுவட்டு வரைபடத்தில் காண்பிக்கப்பட்டுள்ள சுமார் 48 ஏக்கர் பரப்பளவு கொண்ட அரசாங்க காணித்துண்டை வர்த்தக நோக்கத்திற்காக அன்னை ஹோல்டிங்ஸ் (பிரைவட்) லிமிடட் (Annai Holdings (Pvt) Ltd) குத்தகைக்கு கோரப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

02. கோரியுள்ள காணியின் எல்லைகள் கீழே குறிப்பிடப் பட்டுள்ளது.

வடக்கு:சதுப்பு நிலம்;
கிழக்கு:சதுப்பு நிலம்;
தெற்கு: அன்னை சீ புட் (பிரைவட்) லிமிடட்;
மேற்கு: பாதை, பாதைக்கான ஒதுக்கு.

03.கோரப்பட்டுள்ள காணியை தேவைப்படுகின்ற காரணத்திற்காக குத்தகைக்கு வழங்குவதற்கு முடியும். எனவே அரசாங்கத்தின் அங்கீகரிக்கப்பட்ட ஏனைய நிபந்தனைகளின் கீழ் குத்தகைக்கு வழங்குவதற்கு அரசாங்கத்தினால் கருதியுள்ளது.

(அ) குத்தகைக் காலம் : முப்பது (30) வருடங்கள் (2025.07.23ஆந் திகதி முதல் 30 வருடங்கள் முன்னோக்கி);

(ஆ) வருடாந்தக் குத்தகைத் தொகை: கௌரவ அமைச்சரினால் அங்கீகரிக்கப்பட்ட ஆண்டின் காணியின் மதிப்பீட்டுப் பெறுமதியானது ஐந்து மில்லியன் ரூபாவிலும் (ரூ.5,000,000) குறைவாக இருக்கும் சந்தர்ப்பங்களில் தலைமை மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டின் அடிப்படையில் அந்த ஆண்டில் காணிக்கான சந்தைப் பெறுமதியின் 2 % ஆகும். கௌரவ அமைச்சரினால் அங்கீகரிக்கப்பட்ட ஆண்டின் காணியின் மதிப்பீட்டுப் பெறுமதியானது ஐந்து மில்லியன் ரூபாவிலும் (ரூ. 5,000,000) அதிகமாக இருக்கும் சந்தர்ப்பங்களில் தலைமை மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டின் அடிப்படையில் அந்த ஆண்டின் காணிக்கான சந்தைப் பெறுமதியின் 4% ஆகும். இந்த குத்தகைத் தொகை சகல 05 வருடங்களுக்கொருமுறை திருத்தப்பட வேண்டுமென்பதோடு அது முன்னைய 05 வருடங்களின் இறுதியில் அறவிடப்பட்ட வருடாந்த குத்தகை தொகைக்கு 20 % சேர்க்கப்படல் வேண்டும்.

தவணைத் தொகை: அறவிடப்பட மாட்டாது.

(இ) குத்தகைக்குப் பெற்றுக் கொண்டவர் இந்தக் காணியை வர்த்தக நடவடிக்கைகள் தவிர வேறு நடவடிக்கைகளுக்கு பயன்படுத்திக் கொள்ளக் கூடாது;

(ஈ) இந்தக் குத்தகை ஆரம்பிக்கும் திகதி முதல் ஒரு (01) வருட காலத்திற்குள் பிரதேச செயலாளர் திருப்தியடையும் வகையில் அபிவிருத்தி செய்தல் வேண்டும்;

(உ) மாகாணக் காணி ஆணையாளர்/ பிரதேச செயலாளர் மற்றும் ஏனைய நிறுவனங்களினால் விதிக்கப்பட்டுள்ள ஏனைய விசேட நிபந்தனைகளுக்கும் இந்தக் குத்தகை உட்படுதல் வேண்டும்;

(ஊ) நிர்மாணிக்கப்பட்டுள்ள/அமைக்கப்பட்டுள்ள கட்டிடங்களை சிறப்பான அபிவிருத்தி நிலைமயுடன் பேணிவரல் வேண்டும்;

(எ) காணியை குத்தகைக்கு விடப்பட்டிருக்கையில் காணியைப் பெற்றுக்கொண்ட விடயத்தை உரிய காலப்பகுதியினுள் நிறைவேற்றிக்கொள்வதற்கு தவறும் பட்சத்தில் குத்தகையை முடிவுறுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்;

(ஏ) 2025.07.23 ஆந் திகதியிலிருந்து ஐந்து (05) வருடங்கள் கழியும் வரை உப குத்தகை வழங்கல் அல்லது உரிமை மாற்றலுக்கு அனுமதி வழங்கப்பட மாட்டாது;

(ஐ) குத்தகைக்கான வாடகையை தொடர்ச்சியாக செலுத்த வேண்டுமென்பதோடு குத்தகையைச் செலுத்துவதற்குத் தவறும் பட்சத்தில் ஒப்பந்தம் தானாகவே இரத்தாகி விடும். குத்தகையைச் செலுத்துவதனை தொடர்ச்சியாக மேற்கொண்டிராத சந்தர்ப்பத்தில் செலுத்த வேண்டிய நிலுவை குத்தகைத் தொகைக்கு 10 % தண்ட வரி அறிவிடப்படும்.

வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்ட திகதி முதல் 06 வார காலத்திற்குள் குறித்த காணியைக் குத்தகைக்கு வழங்கக் கூடாதென ஏற்றுக்கொள்ளக்கூடிய காரணங்களை எழுத்து மூலமாக எனக்கு அறிவிக்காவிட்டால் கோரிக்கைக்கிணங்க குத்தகைக்கு வழங்கப்படும்.

துசித்த கலப்பத்தி,
உதவிக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகம் சார்பாக.

காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்,
இலக்கம் 1200/6, காணிச் செயலகம்,
''மிஹிகத்த மெதுர'',
ரஜமல்வத்த வீதி,
பத்தரமுல்லை,
2025, திசெம்பர் 23.

01- 75

---

**காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்**

காணி ஆணையாளர் நாயகத்தின் இலக்கம்: 4/10/75254
மாகாணக் காணி ஆணையாளரின் இலக்கம்: EP/28/LB/L7/LS/BAT/KPS/16.

**21(2) ஆம் இலக்க அரசாங்க காணிகள் ஒழுங்குவிதிகளின் கீழான அறிவித்தல்**

மட்டக்களப்பு மாவட்டத்தின் கோரளைப்பற்று தெற்கு பிரதேச செயலகப் பிரிவின் இலக்கம் 209 D, குடும்பிமலை கிராம அலுவலர் பிரிவின் மிரக்கக்கடவை கிராமத்தில் தோராயமான சுவட்டு வரைபடத்தில் காண்பிக்கப்பட்டுள்ள 1/2 ஏக்கர் பரப்பளவைக் கொண்ட காணியை சமய நடவடிக்கைகளுக்காக (Sri Aalaiyadi Pillaiyar Aalayam Temple Trust Bord எனும் பெயரில் குத்தகைக்கு கோரப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

02. கோரியுள்ள காணியின் எல்லைகள் கீழே குறிப்பிடப் பட்டுள்ளது.

வடக்கு:Paddy Land ( வயல் நிலம்);
கிழக்கு:Paddy Land ( வயல் நிலம்);
தெற்கு: Road (ரோட்);
மேற்கு: Paddy Land ( வயல் நிலம்).

03.கோரப்பட்டுள்ள காணியை தேவைப்படுகின்ற காரணத்திற்காக குத்தகைக்கு வழங்குவதற்கு முடியும். எனவே அரசாங்கத்தின் அங்கீகரிக்கப்பட்ட ஏனைய நிபந்தனைகளின் கீழ் குத்தகைக்கு வழங்குவதற்கு அரசாங்கத்தினால் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

(அ) குத்தகைக் காலம் : முப்பது (30) வருடங்கள் (2025.11.21ஆந் திகதி முதல் முன்னோக்கி);

(ஆ) வருடாந்தக் குத்தகைத் தொகை: தலைமை மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டின் அடிப்படையில் 2025 ஆம் ஆண்டின் மேம்படுத்தப்படாத பெறுமதியின் 1/2 % ஆகும்;

(இ) குத்தகைக்கு பெற்றுக் கொள்பவர்கள், குத்தகை ஆரம்பித்து முதல் ஒரு (01) வருட காலத்திற்குள் பிரதேச செயலாளர் திருப்தியடையும் வகையில் இந்தக் காணியை அபிவிருத்தி செய்தல் வேண்டும்;

(ஈ) குத்தகைக்குப் பெற்றுக் கொள்பவர்கள் இந்தக் காணியை சமய நடவடிக்கைகள் தவிர வேறு நடவடிக்கைகளுக்கு பயன்படுத்திக் கொள்ளக் கூடாது;

(உ) பிரதேச செயலாளர் மற்றும் ஏனைய நிறுவனங்களினால் விதிக்கப்பட்டுள்ள ஏனைய விசேட நிபந்தனைகளுக்கும் இந்தக் குத்தகை உட்படுதல் வேண்டும்;

(ஊ) அமைக்கப்பட்டுள்ள கட்டிடங்களை சிறப்பான அபிவிருத்தி நிலைமையுடன் பேணிவரல் வேண்டும்;

(எ) காணியை குத்தகைக்கு விடப்பட்டிருக்கையில் குத்தகைக்காரர் காணியைப் பெற்றுக்கொண்ட விடயத்தை உரிய காலப்பகுதியினுள் நிறைவேற்றிக்கொள்வதற்கு தவறும் பட்சத்தில் குத்தகையை முடிவுறுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்;

(ஏ) 2025.11.21 ஆந் திகதியிலிருந்து ஐந்து (05) வருடங்கள் கழியும் வரை உப குத்தகை வழங்கல் அல்லது உரிமை மாற்றத்திற்கு அனுமதி வழங்கப்பட மாட்டாது;

(ஐ) குத்தகைக்கான வாடகையை தொடர்ச்சியாக செலுத்த வேண்டுமென்பதோடு குத்தகையைச் செலுத்து வதற்குத் தவறும் பட்சத்தில் ஒப்பந்தம் தானாகவே இரத்தாகி விடும்.

வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்ட திகதி முதல் 06 வார காலத்திற்குள் குறித்த காணியைக் குத்தகைக்கு வழங்கக் கூடாதென ஏற்றுக்கொள்ளக்கூடிய காரணங்களை எழுத்து மூலமாக எனக்கு அறிவிக்காவிட்டால் கோரிக்கைக்கிணங்க குத்தகைக்கு வழங்கப்படும்.

எஸ்.வீ.ஏ.டி. இஷாரா எம். சமரதுங்க,
உதவிக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகம் சார்பாக.

காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்,
இலக்கம் 1200/6,
''மிஹிகத்த மெதுர'',
ரஜமல்வத்த வீதி,
பத்தரமுல்லை,
2025, திசெம்பர் 24.

01- 76

# வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தின் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ்க் குறிப்பிடப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ள கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்பட மாட்டா. இனி வரப்போகும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்து சேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

**அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்களை ஏற்றுக்கொள்வார்.**

முக்கிய கவனிப்பு.- இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான கட்டணங்கள் யாவும் அரசாங்க அழுத்தகரினால் ஏற்றுக்கொள்ளப்படும்.

**அட்டவணை - 2026**

| *மாதம்* | | *வெளியீட்டு நாள்* | | | *அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதியும் நேரமும்* | |
|---|---|---|---|---|---|---|
| **சனவரி** | .. | வெள்ளி | 02.01.2026 | .. | நண்பகல் 12 | வெள்ளி 19.12.2025 |
| | | வெள்ளி | 09.01.2026 | .. | நண்பகல் 12 | வெள்ளி 26.12.2025 |
| | | வெள்ளி | 16.01.2026 | .. | நண்பகல் 12 | வெள்ளி 02.01.2026 |
| | | வெள்ளி | 23.01.2026 | .. | நண்பகல் 12 | வெள்ளி 09.01.2026 |
| | | வெள்ளி | 30.01.2026 | .. | நண்பகல் 12 | வெள்ளி 16.01.2026 |
| **பெப்புருவரி** | .. | வெள்ளி | 06.02.2026 | .. | நண்பகல் 12 | வெள்ளி 23.01.2026 |
| | | வெள்ளி | 13.02.2026 | .. | நண்பகல் 12 | வெள்ளி 30.01.2026 |
| | | வெள்ளி | 20.02.2026 | .. | நண்பகல் 12 | வெள்ளி 06.02.2026 |
| | | வெள்ளி | 27.02.2026 | .. | நண்பகல் 12 | வெள்ளி 13.02.2026 |
| **மாச்சு** | .. | வெள்ளி | 06.03.2026 | .. | நண்பகல் 12 | வெள்ளி 20.02.2026 |
| | | வெள்ளி | 13.03.2026 | .. | நண்பகல் 12 | வெள்ளி 27.02.2026 |
| | | வெள்ளி | 20.03.2026 | .. | நண்பகல் 12 | வெள்ளி 06.03.2026 |
| | | வெள்ளி | 27.03.2026 | .. | நண்பகல் 12 | வெள்ளி 13.03.2026 |

\

**எஸ்.டீ. பாண்டிகோராள,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2026 ஆம் ஆண்டு சனவரி மாதம் 02 ஆந் திகதி.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது